**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)**

## வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2016 / 2017

**கலைமாணி (பொது)**

**வியாபார நிர்வாகமாணி (பொது)**

**வர்த்தகமாணி (பொது)**

**தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையத்தினால் மேலே குறிப்பிட்ட பட்டப்படிப்புக்களுக்கு வெளிவாரி மாணவர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் 29.03.2019 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.**

---

**கலைமாணி (பொது) பட்டப்படிப்புக்கான ஆகக் குறைந்த தகைமைகள்**

---

01. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2017 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

**02.** இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள்.

---

**வியாபார நிர்வாகமாணி (பொது) மற்றும் வர்த்தகமாணி (பொது) பட்டப்படிப்புக்கான ஆகக் குறைந்த தகைமைகள்**

---

01. க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் (2017 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முந்திய பரீட்சை) ஆகக்குறைந்த சித்திகளுடன் பொதுச் சாதாரணப் பரீட்சையில் (General Common Test) குறைந்தபட்சம் 30% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு அமர்வுக்கு மேற்படாத வகையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

02. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தினால் வழங்கப்படும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா தரம் (II) அல்லது முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா தரம் (II)

**அல்லது**

03. இலங்கை தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய வணிக சான்றிதழ் பாடநெறி (இரண்டு வருட பாடநெறி)

**அல்லது**

04. இலங்கை தொழிநுட்ப கல்லூரியினால் வழங்கப்படும் அல்லது கல்வி அமைச்சின் மேலதிக கற்கை நிறுவனத்தினால் வழங்கப்படும் வணிகத்தில் கணக்குப் பதிவாளர்களுக்கான உயர் சான்றிதழ்

**அல்லது**

05. கல்வி பொதுத் தராதர சாதாரண தரத்துடன் CIMA Stage – II, அல்லது Chartered (CASL) Stage – II அல்லது AAT இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**அல்லது**

**06.** இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தகைமைகள்.

**குறிப்பு:** கற்கை நெறி தமிழ் மொழி மூலம் நடைபெறும்.

---

**தேவையேற்படின் மாணவர்களின் அனுமதி, தெரிவுப் பரீட்சை மூலம் தீர்மானிக்கப்படும்.**

**மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழக இணையத்தளமான www.seu.ac.lk ஐ பார்க்கவும்**

---

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்லைக்கழகம்
24.02.2019